

# கீதாசார்யன்


கீதாசார்யன்
ஸ்ரீஜயந்தி விழா : 15·8·1980

# ஸ்ரீஜயந்தி விழா

கண்ணதாசன் சௌந்தரராஜன் தீபம் நா. பா. சாண்டில்யன்

சென்ற இதழில் வெளியிட்டிருந்தபடி ஸ்ரீஜயந்தி மலர் வெளியீட்டு விழாவுக்கான ஏற்பாடுகள் கடந்த ஒரு மாத காலமாகவே நடந்து வந்தன. கண்ணன் பெயரால் வெளி வரும் பத்ரிகையின் கண்ணன் விழா மலரை வெளியிட, கண்ண தாசன் அன்புடன் ஒப்புக் கொண்டதில் வியப்பொன்றுமில்லை. விழாவிற்குத் தலைமை தாங்க முன்னாள் தமிழக அமைச்சர் திருச்சி சௌந்தரராஜன் அவர்களை அணுகினோம். அதற்கு ஒரு குறிப்பிட்ட காரணம் உண்டு. அவர் அமைச்சராக இருக்கும் பொழுதே, கீதாசார்யனைப் பற்றிக் கேள்விப்பட்டு, தாமே நமது அலுவலகத்திற்கு வந்து சந்தாதாரராகச் சேர்ந் தார். மேலும் திருவல்லிக்கேணி ஸ்ரீபார்த்தசாரதிப் பெரு மாள் கோயிலுக்கு வரும்போதெல்லாம் நமது அலுவலகத் திற்கு வரத் தவறுவதில்லை. இப்படி நம்மிடம் ஆதரவும் மதிப்பும் கொண்ட ஒருவர்தான் தலைமை தாங்க வேண்டும் என்று அவரை அணுகியபோது அவரும் ஒப்புக் கொண்டார். அடுத்து, முதல் பிரதியினைப் பெற்றுக்கொள்பவர் ஒரு பத்ரிகையாளராக இருந்தால் பொருத்தமாக இருக்கும் என எண்ணினோம். அதற்குள் விழாவிற்கான நாள் குறுகி விட்ட படியால் உடனடியாக ஏற்பாடு செய்ய முடியவில்லை. ஆயி னும் 'ஒரு பிரபல வாரப் பத்ரிகையாளர் பெற்றுக் கொள்வார்' என்று அறிவித்து விட்டோம். முடிவில் தினமணிக்கதிர் பத்திரிகை ஆசிரியர் தீபம் நா. பார்த்தசாரதி அவர்களை அணுகிய போது அவரும் மகிழ்ச்சியுடன் ஒப்புக் கொண்டார். விழாவிற்கான இடத்தை அளித்துதவியவர்கள் சிவா விஷ்ணு கோயில் நிர்வாகிகள். விழாவன்று மாலை மழையாக இருந்த படியால் ஓரளவே கூட்டமிருந்தது. எமது அழைப்பை ஏற்று திரு சாண்டில்யன் அவர்களும் வந்திருந்தார்கள். தவிர 'தினமணி' உதவியாசிரியர் குமாரவாடி ராமானுஜாசாரியர், ஸ்தலசயனத் துறைவார், K.A. மணவாளன், நமது ஆலோசகர்

குழுவைச் சேர்ந்த திரு. S. வெங்கட கிருஷ்ணபட்டாசாரியார், திரு. K. R. ஸ்ரீனிவாஸாசாரியார் ஆகியோரும் எமது அழைப்பை ஏற்று வருகை புரிந்திருந்தார்கள். நமது நிர்வாக இயக்குநர் PT. ஸ்ரீனிவாசன் வரவேற்புரை வழங்க விழா இனிதே துவங்கியது. தலைமையுரை ஆற்றிய திரு சௌந்தர ராஜன், பத்திரிகையின் தரத்தையும் அதை நடத்தும் இளைஞர் களின் ஊக்கத்தையும் பாராட்டினார். மேலும் அவர் ஒரு வேண்டுகோள் விடுத்தார். அதாவது ஒவ்வொரு இதழிலும் பெருமாள் படங்கள் மட்டுமே வெளியிடப்படுகின்றன: அவ் வூர்த் தாயாரின் படங்கள் வெளியிடப் படுவதில்லை. வைணவ சம்ப்ரதாயத்திலே பெருமாளின் கடாக்ஷத்தைவிடத் தாயாரின் கடாக்ஷத்திற்குத்தான் முக்யத்வம் அதிகம்; அவளுடைய புருஷகாரத்தால்தான் நாம் பெருமாளை அடைய முடியும்; எனவே தாயாரின் படத்தையும் வெளியிட வேண்டும் என்பது தான் அந்த வேண்டுகோள்.

கீதாசார்யன் பத்ரிகையை அறிமுகப்படுத்தும் விதமாக பேராசியர் மணவாளன் கீதாசார்யனின் தனித்தன்மையை விளக்கினார். வைணவ சமயத்தைப் பரப்பும் நோக்கம் கொண்ட இப்பத்ரிகையில் ஒவ்வொரு மாதமும் ஒரு திவ்ய தேசத்து எம்பெருமானின் அழகான வண்ணப்படம் வெளி யிடப்படுகிறது; வைதிக வித்வான்களான ஸ்ரீ உ.வே மஹா வித்வான் பிரதிவாதி பயங்கரம் ஸ்வாமி போல்வாரும் எழுது கிறார்கள். பிரபல எழுத்தாளர்களும் எழுதுகிறார்கள். இப்படிப் பலவிதத்திலும் பழமையும் புதுமையும் கலந்து வெளி வரும் பத்ரிகையை அனைவரும் ஆதரிக்க வேண்டும் என்று கூறினார்.

அடுத்து மலரை வெளியிட்டு, கவியரசு கண்ணதாசன் பேசினார். அவர், பத்ரிகை நடத்துவதிலுள்ள சிரமங்களையும், அதுவும் ஆன்மிகப் பத்ரிகைகளை வளர்ப்பதிலுள்ள கஷ்டங் களையும் ஆஸ்திகர்கள் புரிந்து கொண்டு, ஆதரிக்க வேண்டும் என்று கூறினார். மிகவும் எளியநடையில் பிரபல எழுத்தாளர்

கள் எழுதும் கீதாசாரியன் குறிப்பாகப் பெண்களால் விரும் படுவதாகத் தாம் அறிவதாகக் கூறினர். எவ்வளவுக்கெவ் வளவு இப்பத்திரிகை ஆஸ்திகர்களால் வாங்கப்படுகிறதோ, அவ்வளவுக்கவ்வளவு ஆஸ்திகம் வளரும் என்று கூறி, ஒவ் வொரு வீட்டிலும் கீதாசாரியன் திகழும் நாளே நன்னுள் என்று கூறினர்.

முதல் பிரதியினைப் பெற்றுக் கொண்டு உரையாற்றிய தீபம் நா. பார்த்தசாரதி, சாதாரணமாக ஸம்ப்ரதாயப் பத்ரிகைகளுக்கு இருக்கும் ஒரு களையுடன் இது திகழாமல் காலத்திற்கேற்றபடி மிகவும் பொலிவுடன் திகழ்வது இதன் சிறப்பு என்று கூறினர். நாட்டில் பற்பல பத்ரிகைகள் வெளி வந்தாலும் சில பார்க்கக் கூடியவைகளாகவும், சில பார்க்க முடியாதவைகளாகவும், சில படிக்கக் கூடியவைகளாகவும், பல படிக்க முடியாதவைகளாகவும் இருக்கின்றன ஆனல் கீதாசார்யன் பார்க்கும்படி அழகாகவும், படிக்கும்படியான விஷயங்களுடனும் இருக்கிறது. வீட்டில் கற்பூரம் ஏற்றுவது போல் ஊதுவத்தி கொளுத்துவது போல் ஒரு புனிதமானதாக இதை அனைவரும் வாங்கிப் பயனடைய வேண்டும். அதனல் வீடு மங்களமடையும் என்று கூறினர்.

தொடர்ந்து, சிறப்பு விருந்தினராக வந்திருந்த சாண்டில் யன் அவர்கள் பேசும்போது தன்னைப் போன்ற எழுத்தாளர் கள் மற்ற பத்ரிகைகளில் எழுதுவது பொருளுக்காக வென்றும், கீதாசார்யனில் எழுதுவது ஆத்மதிருப்திக்காக வென்றும், இக் காலத்தில் இப்படிப்பட்ட பத்ரிகை மிகவும் அவசியம் என்றும், நாடு போய்க் கொண்டிருக்கும் நிலையில் ஆன்மிகம் ஒன்றுதான் காப்பாற்ற வழியென்றும் கூறினர்.

அடுத்து தினமணி உதவியாசிரியர் குமாரவாடி ராமானு ஜாசாரியர் 'எம்பெருமானும் ஆசார்யனுக ஆசைப்பட்டு கீதா சார்யன் ஆனன், அவனுடைய பெயரால் வெளிவரும் பத்ரிகை அவன் அர்ஜுனனுடைய சோகத்தைத் தெளிவித்தது போல் அனைவரையும் தெளிவிக்க வேணும்' என்றும் குறிப்பிட்டார்.

ஆசிரியர் நன்றிகூற விழா இனிதே முடிந்தது.

# ஸ்ரீவைஷ்ணவம்

Dr. V. V. ராமாநுஜம்

மேலான ப்ரமாணங்களான வேதங்களில் தமது மதத்துக்குச் சாதகமான வாக்கியங்களை மட்டும் ப்ரமாணமாகக் கொண்டு மற்றவைகளைச் சுழித்து பொருள் கொள்பவர்களை வேதகுத்ருஷ்டிகள் என்னலாம். பரப்ரஹ்மம் என்ற ஒரு தத்துவமே உண்மையாக உள்ளது. நாம் காணும் இவ்வுலகங்களும் இவ்வற்றில் வாழும் ஜீவராசிகளும் பொய்யான தோற்றங்கள். பரப்ரஹ்மம் ஞானஸ்வரூபம். அதற்கு ரூபம் (விக்ரஹம்), குணம் எதுவுமே கிடையாது. கேவலம் ஞானமானபடியால் அறியும் ஆற்றலும் இல்லாதது. ஒரே ஒரு உண்மையான பரப்ரஹ்மமே இவ்வுலகிலுள்ள பொருள்களாகவும் ஜீவர்களாகவும் தோற்றமளிப்பது அவித்யை (அஞான இருள்) யின் ஸம்பந்தத்தின் விளைவு. நல்ல வெளிச்சமில்லாத இடத்தில் கிடக்கும் கயிற்றை ஒருவன் பாம்பு என்று ப்ரமித்து பயப்பட வாய்ப்பு உண்டு. வெளிச்சத்தில் கயிறுதான் உள்ளது என்று அறிந்தால் பாம்பு என்ற தோற்றமும் அதன் விளைவான பயமும் விலகி விடுகின்றது. இது போலவே அவித்யை என்ற இருள் விலகினால், ப்ரஹ்மம் ஒன்று தான் ஸத்யமாக உள்ளபடியால் மற்ற பொய்த்தோற்றங்கள் எல்லாம் மறைந்து அது ஒன்றே தோற்றிக் கொண்டிருக்கும். "நான் ஜீவன்" என்ற அநுபவமும் அறிவும் பொய். இதுவும் அவித்யையின் கார்யம். உண்மையில் இந்த "நான்" என்பதும் பரப்ரஹ்மமே. ஒரு சரீரத்தில் அடைந்து ஸம்ஸாரியாக வாழும் "ஜீவன்" தான் பரப்ரஹ்மத்திலின்றும் வேறுபட்டவனல்லன் என்ற உண்மை ஞானமடைந்து விட்டால் அதுவே மோக்ஷம்.

மேலே விவரித்தது சங்கரபகவத்பாதர் விரித்த அத்வைத மதக் கோட்பாடு. நாமம் (பெயர்), குணம், ரூபம் எதுவுமே இல்லாமல் கேவலம் ஸத் (உள்ளது) ஆகவும், சித் (ஞானம்) ஆகவும், ஆநந்தம் (ஆநந்த ஸ்வரூபம்-ஆனந்திக்குமாறு அல்ல) ஆகவும் உள்ள ஒரு ப்ரஹ்மத்தையே ஸத்யமாகக் கொண்ட இம்மதத்தில் தெய்வத்துக்கோ தெய்வ வழிபாட்டுக்கோ இடமில்லை. பரப்ரஹ்மத்தினிடம் அவித்யை வந்தேறுவதால் நிர்க்குணமான ப்ரஹ்மம் ஸகுணமாக நாமரூபங்களுடன் தெய்வமாகத் தோற்றுகிறது. இதை வழிபட்டு (உபாஸித்து) அதனால் நன்மை பெறலாம் என்று அத்வைத மதத்தவர் ஒப்புக் கொள்ளுகின்றனர்.

அவித்யாஸம்பந்தத்தினால் தோற்றும் தெய்வமும் உண்மையில் இல்லாத வஸ்து தானே? தெய்வத்திற்கு (ஈச்வரனுக்கு) சுபாச்ரயமான திருமேனி கிடையாது; நாம் நினைத்து உருகும் குணங்களும் சேஷ்டிதங்களும் கிடையாது; நாத் தழும்பச் சொல்ல ஏத்தும் பெயர்களும் கிடையாது என்கிற கொள்கைகளையுடைய மதம் ஈச்வரனையே ஒருவிதத்தில் அழிக்கும் மதம் தானே? ஆழ்வார் தமது திருவாய் மொழியின் ஆரம்பத்திலேயே, உயர்வற உயர்நலமுடையவன்'' என்று ஒப்பற்ற கல்யாண குணங்களை யுடையவ பரம புருஷன் "சுடர் மிகு சுருதியுள் உளன்": இவனே வேதங்களில் ப்ரதிபாதிக்கப்பட்ட எம்பெருமான் என்று அருளிச் செய்துள்ளதை விளக்கத் தொடங்கின கூரத்தாழ்வான், "அத்வைதிகளின் நெஞ்சைப் பிடிப்பது போல் எடுத்த எடுப்பில் எம்பெருமானின் பெருமைகளை எல்லாம் ஆழ்வார் முதல் முன்னமே அருளிச் செய்துள்ளமை காணீர்!'' என்று நெடும்போது கண்ணுங் கண்ணீருமாய் மோகித்துக் கிடந்ததாக ஐதிஹ்யம்.

எம்பெருமானார் தரிசனமாக வளர்ந்துள்ள இந்த ஸ்ரீவைஷ்ணவ மதத்தில் நாம் ப்ரத்யக்ஷமாகக் காணும் பொருள்களெல்லாம் உண்மையான நித்தியமான (எக்காலத்திலுமுள்ள) வஸ்துக்கள். இவை பொய்த் தோற்றமல்ல.

எல்லாவுலகும் கண்ணன் படைப்பு; அவனுடைய ஸொத்து "நான்" என்னும் ஜீவன், பரமாத்மாவான எம்பெருமானின்றும் வேறுபட்டவனாயினும், அவனுக்கு சரீரமாக உள்ளபடியினால் அவனோடு ஒன்றி இருக்கிறான்.

திடவிசும் பெரிவெளி நீர்நிலமிவைமிசை
படர்பொருள் முழுவதுமாய் அவையவைதொறும்
உடல்மிசையுயிரெனக் கரந்தெங்கும்பரந்துளன்
சுடர்மிகு சுருதியுள் இவையுண்டசுரனே

என்று ஆழ்வாரருளிச் செய்துள்ளபடி. ஆகாசம், தீ, வாயு, நீர், நிலம் என பஞ்சபூதமடியாக உண்டாகின்ற ஸகலபதார்த்தங்களுக்கும் எம்பெருமானே உபாதான காரணமாய் இருக்கின்றான். உண்டான ஒவ்வொரு பொருளிலும் பகவான் குறைவற வியாபித்துள்ளான் ஜீவராசிகளின் சரீரங்களில் ஒரு ஆத்மா (உயிர்) வியாபித்திருந்து (பரந்து) அச்சரீரத்தைத் தாங்கி (தரித்து) நடத்தி (நியமித்து), ஸ்வாமியாய் இருந்து "இது உள்ளது" என்ற சொல்லுக்கு விஷயமாக்குகிறான். இதே போல ஜீவராசிகளின் சரீரம், ஆத்மா இவற்றினுள் உறைந்து, அவற்றை நடத்தி சேஷியாய் (யஜமானனாய்) விளங்குமவன் எம்பெருமான். ஜகத்ஸர்வம் சரீரம் தே என்கிறபடியே ஸகல சேதன அசேதனபதார்த்தங்களும் பரமபுருஷனுக்குச் சரீரமாய் அவனின்றும் வேறாயினும் வேறு படாததாய் உள்ளமையால்,

நீராய் நிலனாய்த் தீயாய்க்காலாய் நெடுவானாய்
சீரார் சுடர்களிரண்டாய்ச் சிவனாயயனானாய்!

என்று ஆழ்வார் அருளிச் செய்கிறபடி, நீர் முதலான பஞ்சபூதங்களென்ன, சுடர் (ஒளி) மயமான சூரிய சந்திரர்களென்ன, தெய்வங்கள் என்று கொண்டாடப்படும் பிரம்ம ருத்ரர்களென்ன (எல்லாவற்றிலும் அந்தராத்மாவாய் உள்ளபடியால்) எல்லாம் அவனே ஆகிறான். இதுவே எம்பெருமானின் ஜகதாகாரத்வம். இதேபாசுரத்தில் பின்விரண்டு அடிகளில்,

கூராராழிவெண்சங்கேந்திக் கொடியேன்பால்
வாராய்! ஒருநாள் மண்ணும் விண்ணும் மகிழவே

என்று வேண்டுகையில் எம்பெருமானுக்கு ஸௌந்தர்யமே வடிவான அஸாதாரண திவ்யமங்களவிக்ரஹமும் உண்டு அதைக் கொண்டே அடியார்களை மகிழ்விக்கிறான் என்பதும் புலனாகிறது.

ஒரு குடம் உண்டாக மண் என்னும் பொருள் உபாதானம். குடத்துக்கு மண் உபாதானகாரணம். அசித் என்றும் ப்ரக்ருதி என்றும் சொல்லப்படும் பஞ்சபூதம் முதலான வஸ்துக்கள் பரமாத்மாவான எம்பெருமானுக்கு அவனின்றும் பிரிக்கமுடியாத பிரகாரங்களாய் (சரீரஸ்தானத்தில்) உள்ளமையால், ப்ரக்ருதியின் மாறுபாடுகளான (பரிணாமங்களான) எல்லாப் படைப்புகளுக்கும் அவனே உபாதான காரணமாகிறான். ஜீவாத்மாக்களும் அவனுக்குச்சரீரங்களாக உள்ளவைகளே. வஸ்திரத்திலுள்ள வெண்மைபோல் ஈச்வரனிடமிருந்து பிரிக்கமுடியாத பிரகாரங்களே ஸகல ச்சேதன அசேதன வஸ்துக்களும். ஒருவிதத்தில் அவனின்றும் இவை வேறுபட்டவையாயினும் அவனாலே தரிக்கப்பட்டு அவனிடம் ஒன்றிக்கிடக்கையால் அவனே இவை என்று சொல்லலாம்படி உள்ளமையால் தேறும் ஒன்று (அத்வைதம்) விசிஷ்டாத்வைதம் எனப்படும். (தொடரும்)

## Dr V.V. ராமாநுஜம் அவர்களின் ஷஷ்டியப்ததபூர்த்தி

கடந்த 40 ஆண்டுகளாக பல்கலைக்கழக ஆசிரியராகப் பணி புரிந்து வந்துள்ள பேராசிரியர் Dr. V V. ராமாநுஜம் அவர்களின் ஷஷ்டியப்தபூர்த்தி அண்மையில் (Sept/oct) நடக்கவிருக்கிறது. அவருடைய தொண்டினைப் பாராட்டும் வகையில் அவர் பெயரால் சென்னை, மற்றும் அண்ணாமலைப் பல்கலைகழகங்களில் சிறந்த முதுநிலை மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்குவதற்கு நிதியமைக்கவும், பாராட்டு விழா ஒன்று நடத்துவதற்கும், அவருடைய மாணவர்களும் அபிமானிகளும், ஒரு குழு அமைத்துள்ளனர். இதற்காகத் தேவைப்படும் பொருளுதவி செய்ய விருப்பமுடையோரை, Secretary, Prof. V.V. Ramanujam 6, st Birthday Celebrations-Committee, University of Madras, A.C. College Campus, Madras - 25. என்ற முகவரிக்கு அன்புகூர்ந்து அனுப்பும்படி கேட்டுக் கொள்ளுகிறோம்.

# திருத்தண்கா

**கண்ணன்:** இப்போது நாம் சேவிக்கச் செல்லும் திருத்தண்கா எனும் திவ்யதேசம் இருவகைப் பெருமை பெற்றது.

**பார்த்தன் :** ஆழ்வார் பாடல்பெற்ற திவ்ய தேசமாகவும் அவதாரஸ்தலமாகவும் இருப்பதுதானே அப்பெருமை? நாம் ஏற்கனவே ஸேவித்துள்ள திருக்கடன்மல்லைக்கும் அப் பெருமை உள்ளதே! அதைத்தவிர ஏதேனும் பெருமை உண்டா?

**கண்ணன் :** உண்டு, பொதுவாக ஆழ்வார் பாடல் களில் திவ்யதேசத்தின் பெயரே காணப்படும். விசேஷமாகச் சில பாசுரங்களில் திவ்யதேசத்து எம்பெருமான் திருநாமமும்

## T.A.பாஷ்யம்

இடம்பெறும். அதிலும் அக்கோயிலின் தாயார் திருநாமம் இடம்பெறுவது மிகவும் அரிது. ஆனால் இவ்வூரைப் பாடி யுள்ள திருமங்கையாழ்வார்'' **''விளக்கொளியை மரதகத்தைத் திருத்தண்காவில்''** என்று மூன்று திருநாமங்களையும் சேர்த் துப் பாடியிருப்பது மிகவும் விசேஷமல்லவா?

**பார்த்தன் :** பெருமான் திருநாமம் **விளக்கொளி** என்றும், திவ்யதேசத் திருநாமம் **தண்கா** என்றும் ஏற்படுவ தற்குக் காரணம் உண்டா?

**கண்ணன் :** பிரமன் திருமாலைக் காணவேண்டி யாகம் செய்தபோது, அதைக் கெடுக்க வந்த அசுரர்கள் உலகம் முழுவதையும் இருட்டாக்கிவிட, எம்பெருமான் ஒரு

---

மேலட்டையில் : **தீபப்ரகாசனும் தேசிகரும்.**

பேரொளியாய்த் தோன்றி இருட்டைப் போக்கினன். அதனுல் அவ்வெம்பெருமானுக்கு விளக்கொளி என்ற பெயர் ஏற்பட்டது. தண்கா என்ற சொல்லுக்கு குளிர்ந்த சோலை என்று பொருள்.

**பார்த்தன் :** இந்த திவ்யதேசம் எங்குள்ளது?

**கண்ணன் :** இப்போது நாம் சேவித்த வேளுக்கைக்கு மிக அருகில் உள்ளது. ரங்கசாமி குளத்தின் பின்புறம் உள்ளது. வடமொழியில் தீபப்ரகாசன் ஸன்னிதி எனப்படும் இத்தலம்தான் வேதாந்தாசாரியரின் அவதாரஸ்தலமுமாகும். இதோ இதுதான் கோயில். நேரே உள்ளே நுழைந்ததும் தெற்கு நோக்கி இருக்கும் ஸன்னிதிதான் வேதாந்ததேசிகர் ஸன்னிதி. முதலில் பிரதக்ஷிணமாக வந்து பிறகு ஸன்னிதிக்குள் செல்வோம்.

**பார்த்தன் :** பிராகாரத்தில் பற்பல வாகனங்கள் உள்ளனவே!

**கண்ணன் :** இவை வேதாந்த தேசிகரின் திருவவதார உத்ஸவத்திற்காக ஏற்பட்டவை. புரட்டாசி மாதம் திருவோணம் முடிய பத்து நாட்கள் இரண்டு வேளையும் வாகனப் புறப்பாடுகளுடனும் வாணவேடிக்கைகளுடனும் மிகவும் சிறப்பாக நடைபெறுகிறது. தவிர ஒவ்வொரு திருவோணத்தன்றும் இரண்டு வேளையும் தேவப்பெருமாள் மாடவீதி எழுந்தருள்கிருர்.

**பார்த்தன் :** இங்கே பிராகாரச் சுவற்றில் பல சித்திரங்கள் காணப்படுகின்றனவே!

**கண்ணன் :** இவை தேசிகரின் வாழ்க்கை வரலாற்றை விவரிக்கின்றன. இவற்றைப் பார்த்துக்கொண்டே பிரதக்ஷிணமாய்ச் சென்று தேசிகர் ஸன்னிதிக்குள் செல்வோம். மூலவர் உத்ஸவர் இருவருமே ஒரு திருக்கரத்தில் ஞானமுத்திரை

யுடனும் மறு திருக்கரத்தில் இரந்தச் சுவடியுடனும் எழுந்தருளியிருக்கிறார். இத்திருமேனிகள் தேசிகருடைய குமாரரான நயனவரதாசாரியர் பிரதிஷ்டை செய்தது என்பர். பக்கத்திலேயே தேசிகருடைய திருவாராதனப் பெருமாளான லக்ஷ்மீ ஹயக்ரீவர் எழுந்தருளியிருக்கிறார்.

**பார்த்தன் :** இனி நாம் பெருமாள் ஸன்னிதிக்குச் செல்ல வேண்டியதுதானே! அதற்கு வழி எப்படி?

**கண்ணன் :** இந்த ஸன்னிதியிலிருந்தே வழியிருந்தாலும், அது அவ்வளவாகச் சரியாக இல்லை. எனவே நாம் ஸன்னிதியிலிருந்து வெளியே வந்து மற்றொரு வாசல் வழியே விளக்கொளி எம்பெருமான் ஸன்னிதிக்குச் செல்வோம்.

**பார்த்தன் :** வேண்டாம் கண்ணா! பிரதக்ஷிணமாகவே செல்வோம். கண்ணா நீ கூறியது சரிதான். இரண்டு சன்னிதிகளும் ஒரே கோயிலில் அமைந்திருந்தாலும் தேசிகர் ஸன்னிதி மிகவும் பொலிவுடன் இருக்கிறதே! ஆனால் இந்த தீபப்ரகாசர் ஸன்னிதி மிகவும் பாழடைந்து கேட்பாரின்றிக் கிடக்கிறதே! பிரதக்ஷிணம் முழுவதும் முட்கள் முளைத்து கால்வைக்கக்கூட முடியாதபடி இருக்கின்றதே!

**கண்ணன் :** ஆம் பார்த்தா! தேசிகர் ஸன்னிதி இவ்வளவு பொலிவுடன் திகழ்வதற்குக் காரணம் ஸ்ரீராம தாசரதி ஐயங்கார் என்ற பக்தர்தான் காரணம். அவர் சுமார் இருபது வருடங்களாக, தனிஒருவராகவே அல்லும் பகலும் அயராது உழைத்து பல லக்ஷம் ரூபாய்கள் சேகரித்து, கோயிலை அழகுறச் செய்து, பல சாஸ்வத நிதிகளேயும் ஏற்படுத்தியிருக்கிறார். அவரே முயன்று இந்த விளக்கொளி எம்பெருமான் ஸன்னதியையும் பொலிவுறச் செய்யவேணும். இதையும் பெருமானிடமே பிரார்த்திப்போம் வா.

**பார்த்தன் :** பிரதக்ஷிணத்திலுள்ள இந்த சன்னதிகள் யாவை?

**கண்ணன் :** முதலில் கிழக்கு நோக்கி இருக்கும் இந்த சன்னிதி ஆண்டாள் சன்னிதி. இதோ இங்கே கோயிலின் புஷ்கரிணி இருக்கிறது. இப்படியே பிரக்ஷிணமாகச் சென்றால் எதிரேயுள்ளது மரகதவல்லித் தாயார் சன்னதி: இனி நாம் தீபப்ரகாசர் ஸன்னிதிக்குள் செல்வோம். இதுவரை நாம் ஸேவித்த எம்பெருமான்களுக்கும் இவருக்கும் தனியானதோர் வேறுபாடு சொல்ல முடியுமா உன்னால்?

**பார்த்தன் :** மற்ற திவ்ய தேசத்து எம்பெருமான்கள் (மூலவர்) தனித்தே ஸேவைதர, இவர் மட்டும் ஸ்ரீதேவி பூதேவி ஸமேதராய் ஸேவை ஸாதிக்கிறார். இதற்குமுன் திருநின்றவூரில் மட்டுமே இவ்வாறு ஸேவித்திருக்கிறோம். சரிதானே?

**கண்ணன் :** மிகவும் சரியாகக் கூறிவிட்டாய் பார்த்தா உண்மையில்லையே நீ திவ்யதேச அனுபவத்தில் நன்கு தேறி விட்டாய். முன்னால் உபயநாச்சிமாரோடும் ஆண்டாளோடும் உத்ஸவர் எழுந்தருளியிருக்கிறார். நன்கு ஸேவித்துக்கொள்.

**பார்த்தன் :** வேறு ஏதாவது விசேஷம் இக்கோயிலில் உண்டா?

**கண்ணன் :** நான் முன்பு பிரஸ்தாபித்த தாசரதி ஐயங்கார், நித்தியபடி ததியாராதனை நிதி ஒன்று ஏற்படுத்தியிருக்கிறார் அதன்படி ஒரு ஆஸ்திகர் 325 ரூபாய் நன்கொடை அளித்தால் அது ஒரு வங்கியில் டெபாசிட் செய்யப்படும். அதில்வரும் வட்டியைக் கொண்டு அந்த நன்கொடையாளருக்கு விருப்பமான ஒருநாளில் இந்த ஸன்னிதியில் 5 பக்தர்களுக்கு ததியாராதனம் செய்யப்படுகிறது. ஆஸ்திகர்கள் அனைவரும் பெருந்திரளாக இத்திட்டத்தில் அன்வயித்து நன்கொடைகள் அளிக்குமாறு கீதாசார்யன் மூலமாகவே கேட்டுக் கொள்கிறோம்.

# திருமங்கை நாயகி

பேராசிரியர் மணவாளன் M.A.B.O.L.

சூர்ப்பணகை என்னும் அரக்கி, பஞ்சவடியில் தங்கியிருந்த இராமலக்ஷ்மணர்களிடம் தகாத முறையில் நடந்து கொண்டாள். காமவெறி அவளுக்குத் தலைக்கேறியிருந்தது. அதனால் காதும் மூக்கும் அறுப்புண்டாள். ஜநஸ்தானத்திலே சென்று கரன் முன்னிலையில் இரத்தவெள்ளம் பெருகக் கதறிப் புரண்டு அழுதாள். தங்கையே உனக்கு இப்படிக்கொடுமை செய்தவன் யார்? உடனே அவனைக் கொன்று தீர்க்கிறேன் என்று கடுஞ் சினத்துடன் கரன் கேட்டான். அதற்குச் சூர்ப்பணகை சொன்ன விடை எல்லோரையும் வியப்பில் ஆழ்த்துகிறது.

''என்னை இப்படிச் செய்தவர்கள் இருவர். நல்ல வாலிபப் பருவத்தினர். மிகவும் அழகானவர்கள். மென்மையான திருமேனி படைத்தவர்கள். ஆனால் பலசாலிகள் தாமரைக் கண்ணினர். மரவுரியையும் மான் தோலையும் உடுத்தியவர்கள். காட்டில் கிடைக்கும் காய் கனிகளை உண்பவர்கள். இந்திரியங்களை வென்றவர்கள். தவக்கோலம் பூண்டவர்கள். தருமநெறி தவறாதவர்கள். கந்தர்வர்களுக்கு ஒப்பானவர்கள். ராஜலக்ஷணங்களுடன் கூடியவர்கள். தசரதகுமாரர்கள். இராமலக்ஷ்மணர் என்னும் அண்ணன் தம்பிமார்கள். தேவர்களோ மனுஷ்யர்களோ நிர்சயிக்க முடியவில்லை. அவர்கள்தான் என்னை இப்பாடு படுத்தினார்கள்'' என்று கூறி அரற்றினாள்.

உன்னை இங்ஙனே மானபங்கம் செய்தவர்கள் யார் என்று கேட்டான் அதற்குச் சூர்ப்பணகை மிக்க சினத்தோடு துன்பம் தாளாமல் ''இரண்டு படுபாவிகள் இப்படி என்னை மானபங்கப் படுத்தினார்கள்'' என்று வாயார அவர்களைப் பழித்துக் கூறி

யிருக்க வேண்டும். அதற்கு மாருக அவர்களுடைய அழகிலே ஈடுபட்டுத் தன்னையும் மறந்து அவர்களைப் போற்றியிருக்கிருள். இராமலக்ஷ்மணர்களின் வடிவழகு அவளை அப்படிப் பேச வைத்துள்ளது. இது இராமவதாரக்கதை. இங்குத் தன் புறத்தி மானபங்கம் செய்தவர்களையும் போற்றிப் புகழ்ந்திருப் பதைக் கண்டோம். ஆனல் எல்லோரையும் வாழவைக்கும் தன்மையில் நன்மையையே செய்யும் அர்ச்சாவதாரத்தில்—அவன் வடிவழகில் ஈடுபட்ட ஒரு தலைவியின் பேச்சினை இனிக் காண்போம்.

அன்று அத்தலைவி அடைந்த மகிழ்ச்சிக்கு அளவேயில்லை, எண்ணி எண்ணி மகிழ்ந்தாள். சொல்லிச் சொல்லி உகந் தாள்; தோழியைத் தேடினுள்; நாடினுள். என்னே இன்று நான் பெற்ற பாக்கியம்; அந்தோ இழந்தாயே தோழி! சற்று முன் வராமல் போனுயே! நான் என்னவென்று சொல்லுவேன்! அற்புதம் அற்புதம் என்று ஆனந்தக் கூத்தாடினுள்.

தோழிக்கோ ஒன்றும் புரியவில்லை. கொஞ்சம் புரியும்படி விவரமாகத்தான் சொல்லேன் என்று தலைவியைக் கேட்டாள். தலைவியும் தன் காதலனை வருணிக்கத் தொடங்கிவிட்டாள். அவர் நிறம் ஒன்றே போதுமே என்ருள். ஆஹா! பொன்னிறம் என்ருள். பொன்மயமான அவர் திருமேனியிலே, மரகதப் பச்சையென மிளிரும் அவர் மார்பிலே பிரகாசிக்கும் அந்த ஹாரத்தின் ஒளியை எப்படி வருணிப்பேன் தோழி! அது மட்டுமா? அவர் வாய்திறந்தும் பேசினுர். வேதமோதும் நல் வேதியராகவும் காண்கிருர். மேன்மையில் தேவாதிதேவனே என்று எண்ணும்படி விளங்கினுர். அப்படிப்பட்டவர் நம் வீடு தேடி வந்தார். அன்னையோ வெளியில் சென்றிருந்தாள். இனி நடந்ததை நான் எவ்வாறு சொல்வேன் என்று நாணத்தால் தலை கவிழ்ந்தாள்.

தோழியோ விடவில்லை. என்னிடமுமா உனக்கு வெட்கம். என்னைவிட ஆருயிர்த்தோழியும் உனக்கு உண்டோ? என்ன

தான் நடந்தது. சொல்லேன் என்று கேட்டாள். அதற்கு அத்தலைவி "ஒன்றும் நடந்துவிடவில்லை. அவர் என்னை உற்றுப் பார்த்தார். எனக்கோ ஒரே அச்சமாக இருந்தது. உடம்பெல்லாம் நடுங்கிற்று. அதைக் காணுற்ற அவர் அஞ்சாதே என்று சொல்வதுபோல் மறுபடியும் ஆறுதலாகப் பார்த்தார். எனக்கென்னவோ ஒரே பயம், ஆனால் ஒருவகைக் கிளுகிளுப்பு. உள்ளத்திலே மகிழ்ச்சிதான். அதே சமயம் அன்னை வந்து விடுவாளோ? கண்டு விடுவாளோ? ஒருக்கால் அவருக்கு இசைவாக நான் இருக்கிறேன் என்று எண்ணிவிடுவாளோ? இந்த அச்சம்தான் பெரிதாகி அஞ்சி நின்றேன். ஆனால் அவர் அழகு! என் சொல்வேன்" என்று மயங்கி நின்றாள்.

மயங்கிய தலைவியைத் தோழி தேற்றினள். அஞ்சாதே என்று ஆறுதல் சொல்லி, அவரைப்பற்றிக் கேட்கும் பொழுது எனக்கும் ஆனந்தமாகவே இருக்கிறது. இன்னும் விரிவாகக் கண்டவைகளையெல்லாம் ஒளிக்காமல் என்னிடம் கூறலாகாதா என்றாள். அதற்கு அவள் "தோழீ! அவர் திருக்கண்களின் அழகை என் சொல்லுவேன். ஓங்கிப் பரந்த மலைகள் போலே விளங்கும் ஆயிரம் தோள்களிலும், மற்றும் அவயவங்களிலும் மின்னிப் பிரகாசிக்கும் ஆபரணங்களின் அழகைத் தான் என் சொல்வேன். அவ்வழகை நோக்குங்கால் அவரைச் சாதாரணமானவர் என்று சொல்ல முடியாது என்றாள்! அப்படியானால் அந்நம்பியைக் காண நங்கைக்கு ஆயிரம் நயனம் வேண்டுமோ? என்று தோழி சற்றுப் பரிகாசமாகக் கேட்டாள். உடனே தலைவி ஆயிரம் தோளால் அலைகடல் கடைந்த சரித்திரத்தைச் சொல்லி அவனைக் காண ஆயிரம் கண்கள் போதாது என்றாள்.

மேலும் இவரை இதற்குமுன் எங்கோ பார்த்ததாக நினைவு என்றாள். நீலமலர்கள் பூத்துக் குலுங்கும் நீர் நிலைகள் சூழ்ந்த குடந்தையில் கிடந்தவரோ? அல்லது மூங்கில் சோலைகளையுடைய குன்றுகள் நிறைந்த திருமெய்ய மலையரோ? ஆழியும் சங்குமேந்தித் திருத்துழாய் மணம் கமழ இளம் பருவத்தின

ராய் நம்முடைய வீட்டுக்கு வந்த இவர் யாரோ தெரிய வில்லையே? அஞ்சன மாமலை போலே மிக்க அழகையுடைய வரான இவர் ஒருக்கால் திருமாலிருஞ்சோலை மறைவரோ? அப்படியாயின் சந்திரன் தீண்டும்படி மேக மண்டலமளவும் உயர்ந்த அப்பெருமலையை விட்டு மிகச்சிறிய என் நெஞ்சி னுள்ளே கண்களினுள்ளே வந்து புகுவானேன்? வந்தவனுக்குத் திரும்பிப் போக வழி தெரியவில்லையோ? இது ஒருவகையில் யான் செய்த பாக்கியமே! தோழி! ஒன்றுமட்டும் நிச்சயம், இவர் என்னை ஒருபோதும் கைவிடமாட்டார். ஆபத்து வந்தால் உதவுவார். நம்பியிருக்கலாம். இவரால் முடியாத காரியமே இல்லை என்றாள்.

உடனே தோழி அதென்ன அப்படி உறுதியாகச் சொல் கிறாய்? சற்று முன்தானே இவரை இன்னாரென்று அறியேன் என்று புலம்பினாய். இப்பொழுது ஆபத்தில் உதவுவார் என் றெல்லாம் சொல்கிறாயே! உனக்கு இவருடைய குணங்களைப் பற்றி என்ன தெரியும் என்று கேட்டாள்.

அதற்குத் தலைவி, முன்பு பிரளயகாலத்தில் பொங்கி எழுந்த ஏழு கடல்களையும், ஏழு உலகங்களையும் தன் திருவயிற்றிலே அடக்கிக் காத்துச் சிறிய ஆலந்தளிரிலே துயில் கொண்ட பரமன் என்று அவரைப்பற்றிக் கேள்விப் பட்டிருக்கிறேன். இப்படி எல்லா உலகங்களையும் காப்பாற்ற வேண்டும் என்ற நல்லெண்ணத்தால் செயல்பட்ட அவர் என்னை ஒரு போதும் கைவிடமாட்டார் என்றே கருதுகிறேன். ஆயினும் அவரு டைய பெருமைகளை முற்றிலும யான் அறியேன், அவருடைய அழகிலே—குணத்திலே தோற்று அவருக்கு யான் அடிமையா னேன் என்று கூறினாள். இப்படிச் சொன்னவள் வேறு யாரு மல்ல, நம்முடைய திருமங்கை நாயகிதான். இந்நாயகியால் வருணிக்கப்பட்ட ஆணழகனை அத்தலைவன் வேறுயாரு மல்ல, நாகை அழகியான் என்று சொல்லப்படும் நாகப் பட்டினத்துச் சௌந்தர்யராஜன்தான்.

# கண்ணன் கதைகள்

## தீபம். நா. பார்த்தசாரதி

### 2. வசுதேவன் திருமணம்

வட மதுராபுரியில் யதுகுல மன்னர்கள் செங்கோல் மாண்புக்குக் களங்கம் வராமல் அரசாண்டு வந்தனர். சூதசேன மன்னருக்கு வசுதேவன் என்ற ஒரு புதல்வன் இருந்தான். இளவரசனான அந்த இளைஞனுக்கு முடிசூட்டு விழாவும் திருமணமும் நடத்தவேண்டிய பருவம் வந்தது. அறிவும், திருவும், அழகும் ஒருங்கமையப்பெற்ற இளவரசனுக்குத் தகுதி வாய்ந்த நங்கையைத் தேடினார்கள். போஜ குலத்து மன்னனின் குமாரியை வசுதேவனுக்கு மணம் முடிக்கலாமென்று எண்ணினார்கள். அவள் பெயர் தேவகி. இளவரசன் வசுதேவனுக்கும் தேவகிக்கும் சூரிய சந்திரர்கள் ஒருங்குதித்தாற் போன்ற பொருத்தமிருக்குமெனத் தோன்றியது. மணமங்கல விழாவுக்கு நாள் குறித்தார்கள். அரச குடும்பத்து திருமணமென்றால் ஆடம்பரத்துக்கும், கோலாகலத்துக்கும் கேட்கவா வேண்டும்?

தேவகிக்கும், வசுதேவனுக்கும் திருமணம் நிகழ்ந்து முடிந்தது. பிறந்த இடத்து அரசின் பெருமையைக் காண்பிப்பவர் போலத் தேவகியின் தந்தை ஏராளமான சீர் சிறப்புக்களை அவளுக்குச் செய்து அனுப்பினார். தேவகியின் தந்தை

பெயர் உக்கிரசேன மகாமன்னர் என்பது. கம்சன் என்ற ஓர் அண்ணனும் அவளுக்கு இருந்தான்.

தங்கத்தினுல் செய்யப்பட்ட நெற்றிப்பட்டங்களையுடைய நானூறு ஆண் யானைகளையும் பதினையாயிரம் வெண் புரவிகளையும், அறுநூறு அழகிய இரதங்களையும், நூற்றுக் கணக்கான எழில்மிக்க பணிப்பெண்களையும், இன்னும் பல பரிசுப் பொருள்களையும் பெண்ணுக்குச் சீதனமாகக் கொடுத்திருந்தான் உக்கிரசேனன். தன் தங்கையின் மேலுள்ள அளவற்ற அன்பின் காரணமாகக் கம்சன், அவளும் அவளுடைய கணவனுன வசுதேவனும் அமர்ந்திருந்த தேரைத் தானே ஒட்டிக்கொண்டு சென்றுன். வட மதுராபுரிக்குப் புகுந்த வீட்டிற்காகப் பிரயாணம் செய்து கொண்டிருந்தாள் தேவகி. எவ்வளவோ முக்கிய வேலைகள் இருந்தும் தன் தமையன் அவற்றையெல்லாம் மறந்துவிட்டுத் தங்களுக்காகத் தேர் செலுத்திக் கொண்டு வருவதை நினைத்தபோது தேவகிக்குப் பெருமை பிடிபடவில்லை. முரட்டு உடலும், முரட்டு மனமும் உள்ளவனுன கம்சனுக்கு அன்பும் பாசமும் இருப்பதைக் கண்டால் யாருக்குத்தான் ஆச்சரியம் நேராது?

மணமக்களின் தேர் வடமதுரையை நோக்கிச் சென்று கொண்டிருந்தது. இணையில்லா !மகிழ்ச்சியின் பொங்குதலில் திளைத்துக் கொண்டிருந்த கம்சனின் செவிகளில் அப்போது இடி முழக்கம் போன்ற பேரோசையுடன் ஓர் அசரீரிக் குரல் எழுந்தது.

''கம்சனே! நீ உன் தங்கையைப் புக்ககத்தில் கொண்டு போய் விடுவதற்காகப் பெருமைப் படுகிருய். பேதையே! ஒரு வகையில் எதிர்காலத்தில் நீ இறப்பதற்கு இதே தங்கை காரணமாக இருக்கப் போகிருள் என்பது உனக்கு எங்கே தெரியப்போகிறது? இவளுக்குப் பிறக்கும் எட்டாவது புதல்வன் உன்னுடைய பரம வைரியாக முளைக்கப் போகிருன். நீ அவன் கையால்தான் செத்தொழியப் போகிருய், இது உறுதி.''

வானவெளியில் உருவமின்றி எழுந்த இந்தக் குரலையும் குரலை ஒட்டி எழுந்த இடிச் சிரிப்பையும் கேட்டபோது கம்ச னுடைய உடல் பாதாதிகேச பரியந்தம் நடுங்கியது. நரம்புகள் புடைத்தன. இரத்தம் சூடேறிக் கொதித்து வேகமாகப் பாய்ந்தது. உள்ளத்தில் குமுறல் ஏற்பட்டது. பற்கள் நறநற வென்று கடிபட, புருவங்கள் வளைந்து நிமிரக் கண்களில் தீப்பொறி பறக்கத் தேரிலிருந்து கீழே தாவிக் குதித்தான் கம்சன். அவன் குதித்த வேகத்தைத் தாங்க முடியாமல் தரை அதிர்ந்தது. கலகலவென்று மணிகள் ஒலிக்கப் பாய்ந்து வந்து கொண்டிருந்த தேரும், தேர்ச் சக்கரங்களும் மணியோசையும் யாரோ மந்திரம் போட்டு அடக்கின மாதிரி ஒரே சமயத்தில் ஓய்ந்து போய் நின்றன.

பல நூறு குதிரைகளும், யானைகளும், தேர்களும், பரிவாரங்களும், ஓட்டம் தடைப்பட்டு ஒரே சமயத்தில் அமைதியடைந்தால் அந்த அமைதி எவ்வளவு பயங்கரமாக இருக்கும்? இந்த அமைதியும் அப்படித்தான் இருந்தது. "ஏன் அண்ணா தேரை நிறுத்தி விட்டீர்கள்? பாதை சீராக இல்லையா?" குயிலைப் போன்ற இனிய குரலில் ஒன்றும் புரியாத திகைப்புடன் தமையனை வினவினாள் தங்கை தேவகி.

"மைத்துனரே! உங்கள் முகத்தில் எதற்காக இந்தக் கோபக் குறிப்பு? ஓடிக்கொண்டிருந்த இரதத்தை நிறுத்தி விட்டு அவசரமாகக் கீழே குதித்து நிற்கிறீர்களே! உங்கள் மனம் புண்படும்படி என்ன நடந்தது?"—என்று வசுதேவனும் அன்பொழுகக் கேட்டான்.

கம்சன் அவர்களுக்கு மறுமொழி கூறாமல் இடைவாளை உருவினான். மறுகணம் வெறிபிடித்தவன்போல் தேருக்குள் தேவகி உட்கார்ந்திருந்த இடத்தின்மேல் தாவி ஏறினான். தேவகியின் கூந்தலை இடது கையினால் தூக்கிப் பிடித்துக் கொண்டு வலது கையினால் அவள் கழுத்தைக் குறிவைத்து வாளை வீசினான்.

தமையனின் இந்தச் செய்கை பற்றி ஒன்றும் புரியாத தேவகி, "ஐயோ! அண்ணு; இதென்ன செய்கிறீர்கள்?"—என்று விறிட்டு அலறினுள்.

"மைத்துனரே! ஆத்திரத்திற்கு ஒரு வரம்பு இல்லையா? இது என்ன வெறிச் செயல்?"—என்று கூறிக் கொண்டே கம்சனின் வாள் பிடித்த கையைப் பற்றித் தடுத்தான் வசுதேவன்.

"வசுதேவா! நீ தடுக்காதே! இப்போது இவளை நான் கொல்லாமல் விட்டுவிட்டால் இவளுக்குப் பிறக்கும் எட்டாவது புதல்வன் என்னைக் கொன்றுவிடுவான். நீ என் கையை விடு; பிறவிப் பகையை முளையிலேயே கிள்ளி எறிந்துவிட வேண்டும்;" என்று கம்சன் மறுபடியும் தேவகிமேல் வாளை ஓங்குவதற்கு முற்பட்டான்.

"கம்சா ஒரே ஒரு கணம் பொறு. நான் சொல்வதைக் கேள். கேட்ட பிறகு உன் விருப்பம் போல் செய்துகொள். மதிப்பும், பெருங்குணமும், பழியோடு படராப் பெருந் தன்மையுமுள்ள போஜ குலத்தில் பிறந்திருக்கின்ற வீரன் நீ! தங்கையைக் கொலை செய்த பழிகாரன் என்ற அபவாதம் உனக்கு ஏற்படலாமா? தேவகிக்குப் பிறக்கின்ற எட்டாவது புதல்வன் தானே உனக்கு எதிரி? எட்டாவது குழந்தை பிறந்த வுடன் அந்தக் குழந்தையை உன்னிடம் கொடுத்துவிடு கின்றேன். அந்தக் குழந்தையை நீ என்னவேண்டுமாலுைம் செய்துகொள். இப்போது இவளை ஒன்றும் செய்ய வேண்டாம். விட்டுவிடு" என்று வசுதேவன் குழைந்த குரலில் கெஞ்சும் பாவனையில் கம்சனின் பாதங்களைப் பற்றிக்கொண்டு வேண்டினுன். தேவகி பயத்தில் மூர்ச்சையடைந்து தேரில் துவண்டு விழுந்துவிட்டாள். சுற்றி இருந்த பணிப் பெண்க ளெல்லாம பயத்தினுல் திக்பிரமையடைந்து ஒன்றும் பேசத் தோன்றுமல் சிலைகள் போல் நின்றனர். கம்சன் மனத்தில் சிந்தனை தேங்கியது. கொலைக்குத் துணிந்து நின்ற அந்த

முரட்டு இதயத்திலும் வசுதேவனின் பேச்சு சிறிதே நெகிழ்ச்சியை உண்டாக்கியது போலும்.

“பிழைத்துப் போங்கள். உங்களை இப்போது இப்படியே விட்டுவிடுகிறேன். குழந்தை பிறந்ததும் அதை என்னிடம் கொண்டுவந்து கொடுத்துவிட வேண்டும்”—என்று இடி முழக்கம் போன்ற குரலில் அதட்டிக் கூறிவிட்டுத் தேரோடு அவர்களை அங்கேயே விட்டுச் சென்றான் கம்சன்.

‘பாவி! தன்னுயிருக்குத் துன்பம் வருமென்று தெரிந்தவுடன் தங்கையென்றும் பாராமல் கொலை செய்வதற்குத் துணிந்துவிட்டானே? இவன் உடம்பில் மனித இரத்தமே ஓடவில்லை போலிருக்கிறது. மனித உடலும் அரக்கர் மனமும் அல்லவா இவனுக்கு வாய்ந்திருக்கின்றன?”—என்று எண்ணிக் கொண்டு தேவகியின் மூர்ச்சையைத் தெளிவித்தான் வசுதேவன். அவள் மூர்ச்சை தெளிந்ததும் தேர்கள் மறுபடியும் புறப்பட்டன. வட மதுராபுரியைச் சென்று அடைந்தன.

(தொடரும்)



# பொன்னப்பன்

ஆழ்வார்கள் எம்பெருமானைப் பொன்னாகப் பேசி யநுபவிக்கின்றார்கள். *பொன்னப்பன் மணியப்பன்* என்றார் நம்மாழ்வார். *பொன்னைமாமணியை* *பொன்னானாய்* என்றார் கலியன். *பொருதுவருகின்ற பொன்னே!* என்றார் பெரியாழ்வார்.

இங்ஙனம் எம்பெருமானைப் பொன்னாகக் கூறுவதற்கு ஒரு பொருத்தஞ் சொல்லலாம்; அதாவது—''ஹேம்ந: சேதோ ந தாஹேந ச்சேதேந கஷேணேந வா—ஏததேவ மஹத் து:க்கம யத் குஞ்ஜாஸமதோலநம்.'' என்றார் ஒரு மஹாகவி; பொன்னைத் தீயிலிட்டுச் சுடுகிறோம்; உளியையிட்டு வெட்டுகிறோம்; உரைகல்லிலேயிட்டுக் கனக்கவுரைக்கிறோம்; இன்ன

**P. B. அண்ணங்கராசாரியர்**

மெத்தனை ஹிம்ஸைகள் செய்யினும் அவற்றால் பொன் சிறிதும் வருந்தமாட்டாது; வருத்தமில்லையென்பது மாத்திரமேயன்று; அந்த ஹிம்ஸைகளெல்லாம் தனக்குப் பரமபோக்யமே யென்பது தோன்ற ஒளியை மிகுத்தும் காட்டும்; பொன்னைத் தீயிலிட்டுச் சுடும்போதும் உளியையிட்டு வெட்டும் போதும் உரை கல்லிலுரைக்கும்போதும் அதற்கு ஒளிமிகுதலைக் காண்கிறோமன்றோ! ஆனால் அந்தப்பொன்னுக்கு ஒருவருத்தம் மாத்திரம் சாலவுண்டாம்;

அஃது என்னென்னில்; 'மிக அற்பமானதொரு குன்றுமணியோடொக்க நம்மை நிறுப்பதே!' என்பதே அதற்கு மிக்க வருத்தமாம். ஒரு திராசில் குன்றுமணியையும்

மற்றொரு திராசில் பொன்னையுமிட்டு நிறுக்கக் காண்கிறோமன்றோ. 'பொன் என்று போற்றப்படுகின்ற நமக்குக் கடைகெட்ட குன்றுமணி தானோ ஈடாகவேணும்' என்று வருந்தி மிகவும் குன்றிப்போகா நின்றதாம். அதுபோல எம்பெருமானும், தூதனுப்பப்பெறுகை, தாம்பால் கட்டுண்கை முதலானவற்றால் சிறிதும் வருந்தான்; வருந்தாமை மாத்திரமேயன்று, அவற்றால் மிக்க முகமலர்ச்சியும் பெற்றிடுவான், 'அப்படி யுண்டோவென்னில்: *இன்னார் தூதனென நின்றான்* என்றது கண்டீரே: இன்னார் தூதனெனப் பட்டான்' என்னாமல் 'இன்னார் தூதனென நின்றான்' என்கையாலே பாண்டவர்க்குத் தூது செல்லுகையாகிற இழிதொழில் செய்து பாண்டவ தூதனென்று பேர்பெற்ற பின்புதான் எம்பெருமானுக்குத் தரிப்பு உண்டாயிற்றென்பது விளங்கவில்லையா?

இனி, தாம்பால் கட்டுண்கையினால் முகமலர்ச்சியுண்டானமை அறிந்தபடி யெங்ஙனேயென்னில்; பட்டர் திருக்கோட்டியூரிலெழுந்தருளி யிருக்கும்போது ஒரு ஸ்வாமி வந்து அடியேனுக்கு ஒருரு திருவிருத்தம் பொருளருளிச் செய்யவேணும்' என்று பிரார்த்திக்க, 'நம்பெருமானைப் பிரிந்த துயரத்தினால் எனக்கொன்றும் சொல்லப் போகிறதில்லை, நஞ்சீயர் பக்கலிலே கேட்டுக்கொள்ளும்' என்று சொல்லி நஞ்சீயர்க்கு நியமிக்க, சீயரும் பொருளருளிச் செய்துவருகையில் "அடைக்கலத்தோங்கு கமலத்து" (*6) என்ற பாசுரத்தில் "வெண்ணெய்க் கன்று ஆய்ச்சி வன்தாம்புகளால் புடைக்கலந்தானை" என்ற விடத்தில் 'புடைக்க அலந்தானை' என்கிற பாடப்படியே "தாம்புகளால் கட்டியடிக்க வருத்தப்பட்டவனை" என்று நஞ்சீயர் பொருளுரைக்க, பட்டர் அதுகேட்டு 'ஜீயா! 'அலந்தானை' என்ற பாடத்திற்காட்டிலும் 'அலர்ந்தானை' என்ற பாடம் ஆழ்வார் திருவுள்ளத்திற்கு மிகப் பொருந்தும்போலே தோன்றுகின்றது' என்றருளிச் செய்தாராம். அலந்தான்-வருந்தினவன். அலர்ந்

தான்—முகவிகாஸமடைந்தவன் என்று பொருள்வாசி காண்க. முகவிகாஸம் எங்ஙனேயெனில்? கண்ணபிரான் வெண்ணெய்களவுசெய்கிற தன்னை யசோதைப்பிராட்டி அடிக்கடி தாம்பினால் கட்டி வருத்துகின்றாளென்று வீட்டிலுள்ள கயிறுகளைத் துண்டு துண்டாக அறுத்துவைத்துப் பின்பே களவுசெய்யப் புகுவான். அவள் இவனை ஒருகையிலே பிடித்துக்கொண்டு கயிறு தேட, அவை துண்டுதுண்டாக இருப்பதுகண்டு அவற்றை ஒன்றோடொன்று முடிபோட்டு ஒரு கயிறுவடிவமாக்கி அது கொண்டு கண்ணபிரானைக் கட்டும்போது, இவன் தன் உடம்புக்கு எட்டப்போராதபடியான அக்கண்ணிநுண் சிறுத்தாம்பினால் கட்ட முடியாதபடிசெய்து எளிதில் தன்னைத் தப்புவித்துக்கொள்ள வல்லவனாயினும், தனது ஸௌலப்யம் ஆச்ரிதபாரதந்திரியம் முதலிய சீலங்களை வெளியிடுவதற்கென்றே பரத்வநிலையைத் தவிர்ந்து மநுஷ்ய ஸஜாதீயனாக அவதரித்திருக்கிற தான் உரலோடு கட்டுண்டு அடியுண்டிருக்கை முதலான இவ்வகைகளாலேயே அக்குணங்களை விளங்கச் செய்துகொள்ள வேணுமென்று கொண்டு, ஒரு சுற்றுக்குப் போராத தாம்பு இரண்டு மூன்று சுற்றுக்குப் போரும்படி உடம்பைச் சுருக்கி அமைத்துக்கொண்டு கண்ணிநுண் சிறுத்தாம்பினால் கட்டுண்ணப்பண்ணிய பெருமாயன்' என்னும்படி ஆவன். 'இங்ஙனே நம்முடைய ஸௌசீல்ய ஸௌலப்ய குணங்கள் விளங்கப்பெற்றோமே, அவதார ப்ரயோஜநம் நன்கு நிறைவேறப்பெற்றதன்றோ' என்று முகமலர்ச்சியடைந்திடுவன் என்க. ஆகவே தூது அனுப்பப்படுதல் தாம்பாலாப்புண்டிருத்தல் முதலிய இழிவான காரியங்களினால் எம்பெருமானுக்குச் சிறிதும் வருத்தமில்லாதிருத்தலோடு மிக்க மகிழ்ச்சியுமுண்டென்பது விளங்கிற்று.

பின்னை எதனால் வருத்தமுண்டாமென்னில், பொன்னுக்கு தன்னைக் குன்றுமணியோடொக்க நிறுத்தல் எப்படி துக்க ஹேதுவோ, அப்படியே *ஒத்தார் மிக்காரையிலனாய

மாமாயனுகிய எம்பெருமானுக்கும் அதிகூஷ்த்ரவஸ்துக்களான சிலவற்ருேடு தன்னை ஒப்பிடப் பெறுதலே துக்க ஹேதுவாமென்பது "ஒட்டுரைத்திவ்வுலகுன்னைப் புகழ் வெல்லாம் பெரும்பாலும், பட்டுரையாய்ப் புற்கென்றே காட்டுமால் பரஞ்சோதீ" இத்யாதிகளாலுணரத்தக்கது. இவ்வகையாலே பொன்னேடொக்கச் சொல்லலாம் எம்பெருமானை.

பொன்னனது மண்ணில் கலந்திருந்தாலும் சேற்றில் அழுந்திக்கிடந்தாலும் உள்ளே மாசு ஏறப்பெருது. எம்பெருமானும் ஹேயவஸ்துக்களோடே கூடியிருந்தாலும் *மாசறு சோதியனே யாவன்.

பொன்னின் மதிப்புக்கு ஒருநாளும் குறைவில்லை. பொன்னகைகளுக்கு எக்காலத்திலும் ஏற்றமுண்டன்ருே. எம்பெருமானுடைய மதிப்புக்கும் ஒருகாலும் கொத்தையில்லை. இங்ஙனே மற்றும் பல உவமைப்பொருத்தங்கள் கண்டுகொள்க.


# Occeanlink


Shipchandlers-shipservice engineers & Exporters

**254 THAMBU CHEITY ST.**

**MADRAS-1**

Phone : 313481

# கீதாசார்யன்-24



ஆசிரியர் :

**M. A. வேங்கடகிருஷ்ணன், M. A.**

தொகுதி 2 | ரௌத்ரி ௵ | புரட்டாசிமீ | செப்80 | பகுதி 12





**7, தெற்குமாட வீதி,**
திருவல்லிக்கேணி
சென்னை—600 005.


## ஆலோசகர் குழு

**சாண்டில்யன்** (தலைவர்)
**Dr. V. V. ராமாநுஜம்**
**K. R. ஸ்ரீநிவாஸாசாரியர்**
**S. வேங்கடகிருஷ்ண பட்டாச்சாரியார்**
**K. E. B. ரங்கராஜன்**

# ஆஸ்திகரே!

நமது பத்ரிகைக்குத் தேவையான அனைத்துப் பொருள்

## BOARD OF DIRECTORS

P. T. SUNDARA VARADAN
Director (Finance)

N. GANAPATHY
Director (Circulation)

R. RAVICHANDRAN
Director (Public Relations)

P. T. SRINIVASAN
Director (Administration)

★

சந்தா விவரம்

| | |
|---|---|
| போஷகர் | ரூ 1000 |
| ஆயுள் சந்தா | ரூ 100 |
| வருடச் சந்தா | ரூ. 12 |

விலை 1—00

வருடச் சந்தா ரூ. 12/- ஆக உயர்த்தப்படுகிறது. ஏற்கனவே சந்தாதாரர்களாக இருப்பவர்கள், தங்கள் சந்தா முடிவடைந்து புதுப்பிக்கப்படும்போது ரூ. 12/- செலுத்தினுல் போதும். தவிர்க்க முடியாத இவ்விலையேற்றத்தினைப் பொறுத்துக்கொண்டு தொடர்ந்து ஆதரிக்குமாறு வேண்டுகிறேம்.

பி டி. சுந்தரவரதன்,
(இயக்குநர்-நிதி).

# மகாகவி பாரதி

"யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல்
இனிதாவதெங்கும் காணோம்"
"தேமதுரத்தமிழோசை உலகமெலாம் பரவும்
வகைசெய்தல் வேண்டும்"

என்று எட்டுத்திக்கிலும் பரவ முழக்கம் செய்து பாடிய மகா கவிபாரதியாரை நாம் மறக்க முடியாது. இந்தச் செப்டம்பர் மாதம் வரும்போதே நமக்கு அவருடைய நினைவு வந்துவிடுறது அவருடைய பெருமையையும், அவருடைய பாடல்களின் பெருமையையும் அவர் மறைவுச்குப் பிறகு தான் தமிழகம் அறிந்தது. எப்படி ஒரு நல்ல பொருளை இழந்த பிறகு அதனுடைய மதிப்புத் தெரிகிறதோ, அப்படியே அறிவிற் சிறந்த பெரியோர்கள் மறைவிற்குப் பிறகு தான் அவர்களின் பெருமையை உலக மக்கள அறிகிறார்கள் பாரதியார் ஒரு தெய்



வீகப் புலவர். அவர் எழுதியிருக்கும் நூல்களையும், தோத்திரப் பாடல்களையும் பார்த்தாலே அவருடைய தெய்வப்புலமை விளங்கும். அவர் காக்கைச் சிறகினிலும், பார்க்கும் மரங்களிலும் தெய்வத் தன்மையைக் கண்டு "காக்கைச் சிறகினிலே நந்தலாலா, உந்தன் கரியநிறம் தோன்றுதையே நந்தலாலா, பார்க்கும மரங்கள் தோறும் நந்தலாலா, உந்தன் பசுமைநிறம் தோன்றுதையே நந்தலாலா' என்று பாடினார். தொண்டரடிப்பொடிஆழ்வார் 'பச்சைமாமலை போல் மேனி' என்று பாடினார் தெய்வத் தன்மையுடையவர்களுக்கு ஒரு சிறு துரும்பைக் கண்டாலும் அதிலும் பரம்பொருளின் உருவத்தைத் தான் காண்பார்கள்.

"நீ சொல்லுகிறபடி எங்கும் உள்ளான் என்ற தெய்வம் இந்தத் தூணிலும் உள்ளானா" என்று இரணியன் பிரஹ்லாதனைக் கேட்டதற்கு, அவனும் சந்தேகம் வேண்டாம், இத் தூணில் உள்ளான் என்றான். அப்படியே பகவானும் பக்தனின் வார்த்தையை மெய்ப்பிக்க அத்தூணிலிருந்து வெளியே வந்தார்.

"எங்கு முளன் கண்ணனென்ற மகனைக் காய்ந்து
இங்கில்லையா லென்று இரணியன் தூண்புடைப்ப
அங்கு அப்பொழுதே அவன் வியத்தோன்றியஎன்
சிங்கப்பிரான் பெருமை ஆராயும் சீர்மைத்தே."

என்று அருளினார் நம்மாழ்வாரும்.

பாரதி அநேக தோத்திரப் பாடல்கள் பாடியிருக்கிறார். கண்ணனிடத்தில் மிகுந்த பக்தி பூண்டிருந்தார் என்பது அவர் பாடிய "கண்ணன் பாட்டு" என்ற நூலினால் தெரிகிறது. பாரத நாட்டில் கண்கண்ட தெய்வமாகிய கண்ணபிரானுக்குப் பாமாலைசூட்டி மகிழ்ந்த கவிஞர்களில் பாரதியாரும் ஒருவர்.

பார்த்தனுக்குக் கீதா சாஸ்திரத்தைச் சொல்லி, அவன் இரதத்தை வெற்றிபெற ஓட்டிய கீதாசார்யனின் திவ்யமங்கள உருவம், கவிபாரதியாரின் மனத்திலும் தோன்றி அவருடைய கவிக்கு ஒருதனி அழகைக் கொடுத்தது.

கண்ணபிரானுடைய செயல்களும் திருவிளையாடல்களும் அவர் மனத்தைப் பரிபூரணமாக ஆகர்ஷித்தன. அவர் ஆழ்வார்கள் பாடியருளிய நாலாயிர திவ்யபிரபந்தத்தை அநுபவித்துக் கொண்டிருந்ததாகத் தெரிகிறது. ஏனென்றால் அவர் பாடிய கண்ணன் பாட்டானது திவ்ய பிரபந்தத்தில் பெரியாழ்வார் திருமொழியில் ஆழ்வார் அருளிச் செய்த பாசுரங்களின் பாவத்தையே பின்பற்றியதாயிருக்கிறது இஷ்டதெய்வங்களைப் பல பாவங்களின் வழிபடலாமெனப் பக்திசாஸ்திரங்கள் கூறுகின்றன. அதையொட்டியே கவிபாரதியாரும் கண்ணனைத் தாயாகவும், தந்தையாகவும், தோழனாகவும், குழந்தையாகவும், நாயகனாகவும், நாயகியாகவும், சேவகனாகவும் பாவித்துப் பாடியயிருக்கிறார்.

சிங்கார ரசம் மிகுந்திருக்கும் இவர் பாடல்கள். இவைகள் பேரின்பத்திற்குச் சாதனமான பேரிலக்கியங்களாகக் கொள்ளா விட்டாலும், பாடியனுபவிப்பதற்கு இனியவையாயிருக்கின்றன.

பாரதியார் ஒரு சங்கீத வித்துவான். அவர் பாடிய பாடல்களுக்கு அவரே ராக, தாளம் அமைத்துப் பாடியிருக்கிறார்.

அவர் தமது முப்பத்தொன்பதாவது பிராயத்தில் சென்னைக்கு வந்திருந்தபோது கோயிலுக்கு வந்தார். அச் சமயம் திருவல்லிக்கேணி ஸ்ரீ பார்த்தசாரதிஸ்வாமி கோயில் யானை அவரை மிதிக்காமல் ஒதுக்கித் தள்ளிற்று. கவி பாரதியார் யானையின் காலடியில் கிடந்தார். அவர் மனத்தில் அந்தர்யாமியாயிருந்த கீதாசார்யன் குவளைக் கண்ணனாக வந்து மிதிபடாமல் காப்பாற்றினன். பிறகு வயிற்றுக் கடுப்பினல் பாதிக்கப் பட்டார்.

அவர் காலனையே "காலா என்றன் காலருகே வாடா! சற்றே உன்னை மிதிக்கின்றேன், அடா! மூலா வெனக் கதறிய யானையைக் காக்கவே, நின்றன் முதலைக்கு நேர்ந்ததை மறந்தாயோ?" என்று பாடிக் கேட்டார். ஆனல் அவரைக் காலன் விடவில்லை'' அவர் சாக விருப்பமில்லாமல் "சாகா வரமருள் ராமா. என்று பாடினர், ஆனல் சாக்காடுதான் அவரை விட்டதா! அதுவுமில்லை "உறங்குவது போலும் சாக்காடு— உறங்கி விழிப்பது போலும் பிறப்பு" என்ருர் வள்ளுவர். மண்ணில் பிறந்த மாந்தர் யாருமே சாவுக்குத் தப்பியதில்லை. அதில் கவிபாரதியார் மட்டும் விலக்கா? அவர் 11-9-1921 இரவு கண்ணன்திருவடி யடைந்தார். அவர் பாடிய பாட்டுகளில்—

கண்ணன்திருவடி எண்ணுக மனமே—
திண்ணம் அழியாவண்ணம் தருமே."

என்பதும் ஒன்றும். இது நம்மாழ்வாருடைய

கண்ணன்கழலிணை நண்ணும் மனமுடையீர்
எண்ணும்திருநாமம் திண்ணம் நாரணமே

என்ற பாசுரத்தை அடியொற்றி யமைந்துள்ளது.

ஆழ்வார்களை யடியொற்றி கண்ணனையே எல்லாமாகப் பற்றிய பாரதியின் நினைவுநாளை இம்மாதம் கொண்டாடுகிருர்கள். நாமும் அவரைச்சற்று நினைத்து மகிழ்வோம்.

# விளக்கொளி கோயில்

**திருத்தண்கா :** விளக்கொளி எம்பெருமான் கோயில் கொண்டு எழுந்தருளியுள்ள இடத்திற்குத் திருத்தண்கா என்று பெயர் வழங்கப்பட்டிருந்தது. ஆழ்வார் திருத்தண்கா என்றே கூறுகிறார். தண்மை மிகுந்த சோலையாக இருந்ததால் தண்கா எனப்பட்டது. 'வெயிலில் நடந்தவர்க்கே நிழலின் அருமை தெரியும்' என்று பெரியோர் கூறுவர். வெகு தொலை விலிருந்து வெய்யிலில் நடந்துவருபவர், சிறிதேனும் நிழலிடம் கிடைக்காதா?' என்று ஏங்கிச் சுற்று முற்றும் பார்த்துக் கொண்டே வருவர். நிழல் நிறைந்த இடம் 'ஒன்று அவர்

# ஸ்தலசயனத்துறைவார்

களுக்குக் கிடைத்து விட்டால் கேட்க வேண்டுமா? அதுபோல் இவ்விருள் தருமா ஞாலத்தில் வாழும் வாழ்க்கை பாலைவனப் பயணம் போன்றது. எம்பெருமானின் திருவடிக் கீழ் வாழும் வாழ்க்கை குளிர்ந்த வாழ்க்கை! அவனது திருவடி நிழல், களைப்பை நீக்கிப் பேரின்பம் அளிக்கும்!

எம்பெருமானை 'வாஸுதேவதரு' என்று சொல்லுவார்கள், 'கற்பகக்கா' என்றும் அவனைக் கூறுவதுண்டு. அவன் மகிழ்ந்து நிலையாக வாழ்வதால் அவனிருக்கும் இடமும் 'தண்கா' எனப் பெயர் பெற்றது.

**சொல்லாய் பைங்கிளியே ;** திருமங்கையாழ்வாராகிய ஒரு தலைவி ஒரு கிளியை வளர்த்தாள்! பாலும் சோறும் இடுவாள். தென்றல் போன்ற பகவானின் திருநாமங்களைச் சொல்லிக் கொடுப்பாள்! எம்பெருமான் மகிழ்ந்துறையும் திவ்யதேசங்களின் பெயரைச் சொல்லுவாள். அதுவும் சொல்லிப் பழகும்! தலைவிக்குச் சொல்லிக் காட்டும்! 'இதுவும் நமக்கு ஒரு நாள் உதவும்' என்று தலைவி எண்ணினாள். அந்த நாள் வந்தது. பகவானது பிரிவு தலைவியால் தாங்கமுடிய

விக்லே! தாய் அந்தக் கிளியைக் கொண்டுவந்து (பெண்ணின்) தலைவியின் எதிரில் அமர்த்துகிருள்.

'கொஞ்சும் கிளியே! பகவானின் பிரிவினுல் என் உயிரே நிலைதடுமாறுகிறது! உன்னை எவ்வளவு பரிவோடு வளர்த்து வருகிறேன்! இப்போது எனக்கு ஓர் உதவி செய்! எம்பெருமானைவிட அவனது திருநாமங்களுக்குத் தனிச் சிறப்பு உண்டு! சொல்லுகிறவர்களைக் காப்பாற்றியே தீரும்! அவனது திருநாமங்களை உன் இனிய மொழியால் கூறு பார்ப்போம், என்று தலைவி கூறினுள்.

கிளியும், குறுங்குடி முகிலே! ஆரமுதே! அரங்கம் மேய அந்தணனே! திருத்தண்கா விளக்கொளி மரகதமே! திருவெஃகா திருமாலே! என்று அழைப்பதுபோல் சொல்லத் தொடங்கியது!

பெண்ணுக்கும் இரங்கும் பசுங்கிளியே! உன்னை இத்தனை நாட்கள் வளர்த்ததனுல் இன்றே பயன்பெற்றேன்! என்று தலைவி அதைக் கைகூப்பி வணங்கினுள்.

இராமதாஸனுன திருவடி, இலங்கையில் இராமனின் பெயரைக்கூறி சீதையின் (பிராட்டியின்) உயிரைக் காப்பாற்றினுர். இங்கே கிளி பகவானின் பெயரைச் சொல்லி பரகால நாயகியைக் காப்பாற்றியது. திருத்தண்கா விளக்கொளி எம்பெருமானின் திருநாமம், தலைவிக்குத் தோன்றி இருந்த பிரிவாற்ருமைத் துன்பத்தைத் தணித்துக் குளிர்ச்சி அளித்தது!'

**அணையும் விளக்கு!** எம்பெருமானை விளக்கு என்று பெரியோர்கள் குறிப்பிடுவது வழக்கம். இவனை 'மறையாய் விரிந்த விளக்கு' என்றும், 'வேதாந்த விழுப்பொருளின் மேலிருந்த விளக்கு' என்றும் ஆழ்வார்கள் புகழ்கிருர்கள். தான் இருக்கும் இடத்தையும், தன் அருகில் இருக்கும் பொருள்களையும் தெளிவாக விளக்கிக் காட்டுவது விளக்கு! விளக்கொளிப் பெருமாளுக்கு ஸம்ஸ்கிருத மொழியில் 'தீபப்ப்ரகாசர்' என்று பெயர்.

இந்த எம்பெருமான் (தன் ஸ்வரூபம், ஜீவாத்ம ஸ்வரூபம், உபாய ஸ்வரூபம், விரோதி ஸ்வரூபம், புருஷார்த்த ஸ்வரூபம் என்னும் அர்த்த பஞ்சகத்தை) ஐந்து சிறப்புப் பொருள்களை விளக்கி உணர்த்தினான்.

பகவானுக்கு அருகில் விளக்கு இருக்க வேண்டியது மிகவும் அவசியம்! அத்திகிரி மலைமேல் இருக்கும் பரம்பொருளை இந்த ஒளிவிளக்கு ளக்கிக் காட்டுகிறது! இது ஒருவரும் ஏற்றாத விளக்கு! அணையாத விளக்கு! ஆயினும் பரகால நாயகி போன்றவள் அன்போடு அணையும் (அணைய விரும்பும்) விளக்கு! அணையா விளக்காகவும், அணையும் விளக்காகவும் இருக்க அவனொருவனாலேயே முடியும்! ஆரே அறிவார் அவன் பெருமை!

**அடிக்கீழமர்ந்துறையும் மகான்:** வேகவதி என்னும் புண்ணிய நதி காஞ்சிபுரத்தில் இருக்கிறது. வேகவதி நதிக் கரையில் தும்பை வனம் இருந்தது. தும்பை என்னும் சொல் நாளடைவில் மருவி தூப்புல் என்று ஆயிற்று. அங்குப் புரட்டாசித் திருவோணத்தில் பிறந்தவர் வேதாந்தாசாரியர். இவரை வேதாந்த தேசிகன் என்றும் தேசிகர் என்றும் சொல்லுவார்கள். இவர் விளக்கொளி எம்பெருமானின் திவ்ய கடாக்ஷத்தினால் ஞானம் அனுட்டானங்களில் சிறந்து விளங்கினார். ஆசார்யவரரான எம்பெருமானாரிடம் பேரன்பு கொண்டு விளங்கினார். ஸம்ஸ்கிருத மொழியில் சாஸ்திர நூல்களையும், ஸ்தோத்திரங்களையும் இயற்றியுள்ளார். தமிழ் மொழியிலும் சிலபாடல்களை இயற்றி இருக்கிறார். இவை இப்போதும் இவரது புலமையை விளக்கிக் கொண்டிருக்கின்றன. தன்னைக் காக்கும் பொறுப்பு எம்பெருமானுடையது (மம ஸ்ரீபதே ரேவ) என்பதை அறிவித்துக் கொள்வது போல் வேதாந்த தேசிகர் (விக்ரஹ உருவத்தில்) இப்போதும் விளக்கொளியிலேயே எழுந்தருளியிருக்கிறார்.

பெண்ணின் வருத்த மறிந்தவன். தலைவி! உன்முகத்தில் கவலைக்குறி காணப்படுகிறது! உடலும் இளைத்துக்கொண்டே வருகிறது! காரணத்தையும் சொல்ல மறுக்கிறாய்! நீ புலம்பு வதைக் கேட்கும்போது யாரோ ஒருவனிடம் மனத்தைப் பறி கொடுத்தாகத் தெரிகிறது! பேதையின் உள்ளத்தைப் பறித்துச் சென்றவன் யார்? அவன் உண்மையாகவே. 'மலரைவிட மென்மையானது பெண்ணுள்ளம்' என்பதை அறியாதவன்! பெண்ணின் வருத்தமறியாத அவனை மறந்துவிடு' என்று தோழி கூறினாள்.

தோழி! அவன் பெண்ணின் வருத்தமறிந்தவன்! சத்திய பாமையின் ஆசையை நிறைவேற்றுவதற்காகத் தேவருலகத்திலிருந்து சோலைபோல் தழைத்திருந்த பாரிஜாத மரத்தையே கொண்டுவந்து துவாரகையில் நாட்டியவன்! தானிருக்குமிடத்தில் ஒரு சோலை இருக்க வேண்டுமென்று விரும்பியவன்! பிறர்க்கு உதவுவதையே தன் கடமையாகக் கொண்டவன். அக்கண்ணபிரானே விளக்கொளிப் பெருமான், தன் திருமேனிச்சுடரொளியைக் காட்டி அறிவைக் கவர்ந்தான்! பெண்களுக்குரியது நாணம்! என்னிடமிருந்து அதையும் கவர்ந்து சென்றான்! என்னுடையகண் அவனையே காணத்துடிக்கிறது! செவி அவனது பெருமைகளைக் கேட்கத்துடிக்கிறது! வாய் அவனையே புகழ விழைகின்றது! மூக்கு அவனணிந்த திருத்துழாய் மாலையின் நறுமணத்தையே தேடுகிறது! இவ்வுடலோ அவனையே நாடி நிற்கிறது! அந்தோ! அவன் தண்காவில் வாழ்கிறான்! மருத்துவனாகிற அம்மாமணி வண்ணனை என்னிடம் அழைத்து வந்தால் என் உள்ளுறும் சிந்தை நோய் தீரும்! என்றாள் தலைவி.

'ஆட்பட்டேன் ஐம்பொறியால் ஆசைப்பட்டேன் அறிவும்
கோட்பட்டு நாணுங்குறைபட்டேன்—சேட்பட்ட
வண்காவை வண்துவரை வைத்த விளக்கொளிக்குத்
தண்காவைச் சேர்ந்தான் தனக்கு'

நூற்றெட்டுத்திருப்பதி அந்தாதி-(76)

சிறுவர் பகுதி — 5

# வேதாந்த தேசிகர்

**கீதை மாமா :** இன்று உங்களுக்கு, இந்த புரட்டாசி மாதத்தில் அவதரித்த ஒரு மாபெரும் அறிஞரின் கதையைச் சொல்லப் போகிறேன். அவர் யாரென்று உங்களால் கூற முடியுமா?

**பக்திசாரன் :** புரட்டாசி மாதத்தில் என்றால், திருவோண நக்ஷத்திரத்தில் அவதரித்த வேதாந்த தேசிகர் தானே அந்த அறிஞர். அவர் வடகலை என்று கூறுகிறார்களே, உண்மையா மாமா?

## ஆழ்வார்

**கீ. மாமா :** இந்த கலை வித்தியாசமெல்லாம் வேதாந்த தேசிகர் காலத்திற்குப் பிறகே ஏற்பட்டன. நம்மாழ்வார் முதல் மணவாள மாமுனிகள் வரை எல்லா ஆழ்வார் ஆசாரியர்களும் எந்த கலையைச் சார்ந்திருந்தனரோ, அதே கலையைத் தான் வேதாந்த தேசிகரும் சார்ந்திருப்பார். இதில் துளிகூட சந்தேகத்திற்கு இடமில்லை.

**ஆண்டாள் :** அப்படியானால் ஆழ்வாராசார்யர்களெல்லாம் வடகலையா, தென்கலையா?

**கீ. மாமா :** அதைப் பற்றிய சர்ச்சையை நாம் தவிர்ப்பது நல்லது. நாம் இங்கே கூடியிருப்பது ஆழ்வார் ஆசார்யர்களின் வரலாறுகளை அறிவதற்கேயொழிய, அவர்கள் எந்தக் கலையைச் சேர்ந்தவர்கள் என்று விவாதிப்பதற்கல்ல.

**சுதர்சனன் :** அப்படியானால் ஏன் தென்கலையாரும் வடகலையாரும் ஒன்றுகூடி, இதைப்பற்றி நிர்ணயம் செய்யக் கூடாது,

**கீ. மாமா :** தற்போதைய நிலையில் இது சாத்தியமில்லை. ஆனால் இரு கலையாரும் இனிமேல் ஒருவர் விஷயங்களில் ஒருவர் தலையிடாமலும், ஒருவருக்கொருவர் உதவி புரிந்து கொண்டும் இருந்தால்தான் மற்றவர்களை நாம் சமாளிக்க முடியும். இனி வேதாந்த தேசிகரின் கதைக்கு வருவோம்.

**பராசரன் :** ஒரு சந்தேகம், இரு கலையாருக்கும் ஆசாரியர்களின் வரிசையில் வேதாந்த தேசிகரும் உண்டல்லவா?

**கீ. மாமா :** நன்றாக உண்டு. பிள்ளைலோகாசிரியருக்கு அடுத்து வேதாந்த தேசிகரே. இவர் கி. பி. 1268 ஆம் ஆண்டு காஞ்சிபுரத்தில் திருத்தண்கா எனும் திவ்யதேசத்தில் அநந்த ஸோமயாஜிக்கும், தோதாத்ரியம்மைக்கும் திருக்குமாரனாக அவதரித்தார். சிறுவயது முதலே மிகவும் அறிஞராக விளங்கினார். கிடாம்பி அப்புள்ளார் என்னும் ஆசாரியரை குருவாக அடைந்து ஸகல சாத்திரங்களையும் கற்று, மந்த்ர விசேஷங்களையும் பெற்று சிறந்து விளங்கினார். உரிய காலத்தில் திருமணம் செய்து கொண்டு, சாஸ்த்ர விளக்கங்களை அளித்துக்கொண்டு காஞ்சீபுரத்திலேயே வாழ்ந்து வந்தார். பிறகு தென்திசை திவ்யதேசங்களை மங்களாசாஸனம் செய்ய ஆசைப்பட்டு திருவயிந்திரபுரம் சென்று அங்கு ஹயக்ரீவ மஹா மந்த்ரத்தை ஜபித்து ஹயக்ரீவரின் அருளைப்பெற்றார். ''ஸர்வதந்த்ரஸ்வதந்த்ரர்'' என்ற பட்டத்தையும் பெற்றார்.

**ஆண்டாள் :** ''ஸர்வதந்த்ரஸ்வதந்த்ரர்'' என்றால் என்ன அர்த்தம்?

**கீ. மாமா :** அதற்கு, ''எல்லாக் கலைகளிலும் வல்லவர்'' என்று பொருள். இப்பட்டத்தை இவர் கொண்டிருப்பதை

பலர் பலமுறை எதிர்த்தார்கள். ஒருமுறை ஒரு கொத்தன் "உம்மால் ஒரு கிணறு கட்ட முடியுமா? இதைச் செய்தால் நீர் எல்லாக்கலைகளிலும் வல்லவர் என்பதை நான் ஒப்புக் கொள்கிறேன்'' என்று கர்வமாகச் சொல்ல, தேசிகரும் அங்கேயே அவன் முன்னிலையிலேயே ஒரு கிணறு கட்டி அவனுடைய கர்வத்தை அடக்கினர். இன்றும் அக்கிணறு திருவயிந்திரபுரம் கோயிலில் இருக்கிறது. அதே போல் ஒரு சிற்பி—அவருக்கு சிற்பக்கலையில் வல்லமை உண்டா என்று வினவ, தம்மைப் போலவே அதி அற்புதமான ஒரு சிலையைச் செய்து காட்டினர். இன்று திருவயிந்திரபுரத்தில் எழுந்தருளியிருக்கும் தேசிகர் விக்ரஹம் அதுதான்.

பராசரன் : தேசிகர் மந்திரக்கலையிலும் வல்லவர் என்று கூறினீர்களே.

கீ. மாமா : ஆம், இதற்கும் பல சோதனைகள் வந்தன. இவருடன் போட்டியிட்டுத் தோற்ற மந்திரவாதியொருவன் இவர்மேல் பொறாமை கொண்டான். தனது மந்திர சக்தியால் ஒரு குளத்திலுள்ள தண்ணீரையெல்லாம் அருந்தி, அது வேதாந்த தேசிகருடைய வயிற்றிலே போகும்படி செய்தான். தண்ணீர் பெருகப் பெருக, தேசிகர் வயிறு வெடித்து இறக்க வேண்டுமென்பது அவன் எண்ணம். இதையறிந்த தேசிகர், தனது திருமாளிகையில் ஒரு தூணைத் தன் நகத்தால் கீறி அந்தத் தண்ணீர் முழுவதும் அதன்மூலம் வெளிவரச் செய்து, அந்த மந்திரவாதியின் செருக்கை அடக்கினர். அதுபோலவே ஒரு பாம்பாட்டி இவர்மீது சில பாம்புகளை ஏவிவிட, தேசிகர் கருடராஜனை, கருடதண்டகம் என்ற ஸ்தோத்ரத்தால் துதிக்க, கருடராஜன் அங்கே தோன்றி அப்பாம்புகளைத் தூக்கிக்கொண்டு சென்றுன். இம்மாதிரி பல நிகழ்ச்சிகள் நடந்தன.

பராங்குசன் : திருவயிந்திரபுரத்திலிருந்து தேசிகர் எங்கெங்கே சென்றார்?

**கீ. மாமா :** அங்கிருந்து திருக்கோவலூருக்குச் சென்று, அப்பெருமான் விஷயமாக தேஹளீசஸ்துதி அருளிச் செய்தார். பிறகு யாத்திரையாக மீண்டும் காஞ்சிக்கே திரும்பி தேவப் பெருமாளையும் பெருந்தேவித்தாயாரையும் தமது தாய்தந்தையாகப் பாவித்து சேவை செய்து வந்தார்.

**பக்தி சாரன் !** என்ன மாமா அதற்குள் கதை முடிந்து விட்டதா?

**கீ. மாமா :** வேதாந்த தேசிகரின் வரலாற்றைச் சொல்ல வேண்டுமானால் இன்று ஒரு நாளென்ன, பல நாட்களும் சொல்லிமுடியாது. நான் உங்களுக்கு வரலாறு முழுவதையும் கூறவில்லை. முக்யமான சிற்சில பகுதிகளையே கூறுகிறேன். தேசிகர் ஏழ்மையில் பிறந்திருந்தாலும் செல்வத்தை ஏறெடுத்து நோக்காதவராக விருந்தார். ஒருசமயம் விஜய நகர மன்னன், வித்யாரண்யர் என்பவர் மூலம் இவரது ஞானத்தைப் பற்றிக் கேள்விப் பட்டு அதிசயித்து இவரை கௌரவிக்க எண்ணினான். ஆனால் தேசிகரோ அந்த செல்வங்களையெல்லாம் வெறுத்துத் திருப்பியனுப்பிவிட்டு 'வைராக்ய பஞ்சகம்' என்ற நூலினையும் அம்மன்னனுக்கு எழுதியனுப்பினார். தாம் ஏழ்மை நிலையிலிருந்தாலும் பிறர்க்குப் பல நன்மைகளை அருளினார். ஒருநாள் ஒரு ப்ரம்மசாரி தேசிகரை ஸேவித்துத் தனது கல்யாணத்திற்குப் பொருளுதவி செய்ய வேண்டினார். தேசிகர் தமது ஏழ்மை நிலையை எடுத்துச் சொல்லித் தன் இயலாமையை எடுத்துரைத்த போதும் அப்பிரம்மசாரி வற்புறுத்தவே, 'ஸ்ரீஸ்துதி' ஒன்று இயற்றி அவனிடம் கொடுத்து, அதைக் கொண்டு பெருந்தேவித் தாயாரை வேண்டச் சொல்லியனுப்பினார். அப்பிரம்மசாரியும் அப்படியே செய்ய, பெருந்தேவித்தாயார் சன்னதியில் சுவர்ணக் காசுகள் அப்பிரம்மசாரிக்குக் கிடைத்தன.

**ஆண்டாள் !** தேசிகருக்குக் குழந்தைகள் உண்டோ?

**கீ. மாமா :** சகல வகையிலும் அவருக்கு ஏற்றவாறு வரதாசாரியர் என்ற ஒரு குமாரர் அவருக்கு இருந்தார். அவருக்கு நயனாராசார்யர் என்றும் பெயருண்டு.

**பக்திசாரன் :** தேசிகருடைய தனிப் பெருமைகள் என்ன?

**கீ. மாமா:** வைணவ ஆசார்யர்களிலேயே, தமிழிலும், வடமொழியிலும், மணிப்ரவாளத்திலும் நூற்றுக்கும் மேற்பட்ட நூல்களை அருளிச் செய்தவர் இவர் ஒருவரே! இவர் பெற்ற பட்டங்கள் பலப்பல. "கவிதார்க்கிக கேஸரி" "வேதாந்தாசாரியர்", "ஸமஸ்யாஸஹஸ்ரி", "ஸர்வதந்த்ர ஸ்வதந்த்ரர்" என்று ஒவ்வொரு பட்டத்திற்கும் ஒருநாள் முழுவதும் வரலாறு கூறலாம். தனது இறுதிக் காலத்தில் தேசிகர் ஸ்ரீரங்கம் சென்று வாழ்ந்து வந்தார். ஆனால் அது சமயம் துலுக்கர்கள் படையெடுப்பினால் ஸ்ரீரங்கம் பாதிக்கப் பட்டிருந்தமையால் அரங்கனைச் சேவிக்க இயலவில்லை என்று கூறுவர். சுமார் 100 வருட காலம் இவ்வுலகிலெழுந்தருளி யிருந்து திருநாடலங்கரித்து விட்டார்

**கோவிந்தன் :** என்ன மாமா இது. அதற்குள் முடித்து விட்டீர்களே!

**கீ மாமா :** நான் ஏற்கனவே சொல்லியபடி, தேசிகனின் வரலாற்றைச் சொல்ல இன்றொருநாள் போராது அடுத்த மாதம், நீங்கள் இதே போன்று வைணவ ஆசார்யர்களின் தலை சிறந்தவரான பிள்ளைலோகாசாரியர் வரலாற்றைக் கேட்கப் போகிறீர்கள். கீதாசார்யன் அருள் பொங்க எனது ஆசிகள்.